அவர்களை அவதிக்குள்ளாக்குகிற அளவிற்கு அமையாமல் நிச்சயமாகப் பார்த்துக் கொள்ளும் என்ற உறுதியை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் பிரச்னையை நீங்கள் சொல்லுங்கள்.

(ஈ) சென்னை நகர் சேரிவாழ் மக்களுக்கு அளிக்கப்படும் பஞ்ச நிவாரணம் குறித்து

Thiru K. M. SUBRAMANIAM : Sir, I have also given notice of a motion about the distribution of famine relief to slum dwellers in Madras particularly in Thyagarayanagar area. There it has been indiscriminately done and there are still more than 500 families who have not received the relief. They are expecting to receive the relief every day and they are disappointed. I want to know what action does the Government propose to take. Every day they are marching to the Tahsildar's office and they are told to come tomorrow, tomorrow, tomorrow. Even day before yesterday, some people were sent back like that. I only want to know what action the Government proposes to take, because there have been indicriminate distribution, bad distribution and some grants have been distributed wrongly. I want to know what action the Government proposed to take in this matter.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நல்ல காரியங்கள் அல்லது நிவாரணங்கள் அல்லது உதவிகள் இவைகளை அரசு செய்கிற நேரத்தில் அதைப் பாராட்ட முடியாவிட்டாலும் அதில் ஏதோ தவறு இருக்கிறது என்று எடுத்துச் சொல்வதன் மூலம் அரசின் முயற்சிகளுக்கு ஊறு விளைவிப்பதற்குச் சில பேர் பிரயத்தனப்படுகிறார்கள். அந்த வகையைச் சேர்ந்தது தியாகராய நகரில் உள்ள பிரச்னையாகும். உள்ளபடியே பாரபட்சமான காரியம் நடைபெற்றிருக்குமானால் நிச்சயமாக அரசு கவனிக்கத் தவறாது. இதைப் பயன்படுத்திக் கொண்டு பாதிக்கப்படாதவர்களும், எந்த விதமான கஷ்டத்திற்கு உள்ளாகாதவர்களும் தங்களுக்கு உதவி தேவை என்று முறையிட்டுக் கொண்டு வருகிறார்கள். அவசரப்பட்டு பாதிக்கப்படாதவர்களுக்கு அரசாங்கம் பணத்தை அள்ளி வழங்கத் தயாராக இல்லை. எனினும் பரிசீலிக்கப்படும்.

1973 ஏப்ரல் 5]

(Dr. Hande and Thiru K. M. Subramaniam rose.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் இருந்தீர்கள். என்னுடைய பிரச்னையையும் கேளுங்கள். எவ்வளவு சுருக்கமாகப் பேச முடியுமோ அப்படிப் பேசவேண்டும். கட்சித் தலைவர்கள் சொன்னார்கள். 5-ம் தேதி பேரவை அலுவல்களை முடித்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். கேள்வி நேரம் முடிந்து முக்கால் மணி நேரமாகிறது. இன்றைக்கு 9¾-க்கே கேள்வி நேரம் முடிந்தது. இப்போது 10½ ஆகிறது. இன்னும் நாம் மெயின் பிஸினஸுக்கு வரவில்லை.

Dr. H. V. HANDE: Sir, it is a question of 15 lakhs of workers. It is about the cost of living . . . .

நாளைக்கு இந்த பிராப்ளம் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கொடுத்த 42-வது விதியின்கீழ் கொடுத்த தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: காஸ்டு ஆஃப் லிவிங் இன்டெக்ஸ் பிரச்னை, 15 லட்சம் தொழிலாளர் பிரச்னை. ஒரு நிமிஷத்திற்கு மேல் எடுத்துக் கொள்ள மாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து எனக்காக உட்காருங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஒரு நிமிஷம்தான். முக்கியமான பிரச்னை.

Mr. DEPUTY SPEAKER: I think it was not at all kept in abeyance. That particular motion of yours I think has been disallowed once.

(திரு. சோ. அழகர்சாமி நின்றார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனிப்பட்ட முறையில் நேரம் கொடுக்க முடியாது. இன்னும் 3 பேர் கேட்டால் 11½ மணி ஆகும். நேரடியாக அமைச்சரவர்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.